**ஹோமியோபதி வைத்திய சபை - 2021**

---

**1.1 அபிப்பிராயம்**

ஹோமியோபதி வைத்திய சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

வைத்திய சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, வைத்திய சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

வைத்திய சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் வைத்திய சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க

ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- வைத்திய சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- வைத்திய சபை ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- வைத்திய சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வைத்திய சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1983 இன் 12 ஆம் இலக்க | உத்தியோகத்தர் ஒருவரின் சேவை | புதிய பதிவாளருக்கு | பணிக்கொடைக் கொடுப்பனவுச் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பணிக்கொடைக் கொடுப்பனவு சட்டத்தின் 5(1) ஆம் பந்தி | முடிவடைந்த தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் பணிக்கொடை செலுத்தப்பட வேண்டிய போதிலும், 2021 யூலை 15 ஆந் திகதி சேவையிலிருந்து விலகிய மருத்தவ அதிகாரி ஒருவருக்கு பணிக்கொடை செலுத்தப்படாததுடன் 2021 நவம்பர் 09 ஆம் திகதி சேவையிலிருந்து விலகிய பதிவாளருக்கு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பணிக்கொடை செலுத்தப்படாததால் ரூபா 52,140 ஆன மிகைக்கட்டணமொன்று செலுத்தப்பட.டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பணிக்கொடையை உடனடியாக வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டதாகவும், 2022 நவம்பர் 09 அன்று சேவையிலிருந்து விலகிய பதிவாளருக்கு நிலுவைத் தொகையைப் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டும், அவர் அதைப் பெற மறுத்துவிட்டார் என்றும குறிப்பிட்ப்பட்டிருந்தது.. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியதாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2016 இன் 10 ஆம் இலக்க ஹோதியோபதி அதிகாரச்சட்டத்தின் | | | |
| (i) | 15 ஆம் பிரிவின் (ஈ) மற்றும் (உ) உப பிரிவுகள் | ஹோமியோபதி மருத்துச் சபையால் ஹோமியோபதி நிறுவனம் நிறுவப்படவில்லை என்பதுடன் அரசு தவிர ஹோமியோபதி மருத்துவ நிறுவனங்களில் சிகிச்சை அளிக்கும் ஹோமியோபதி மருத்துவ நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதற்கான குறைந்தபட்ச தரநிலைகள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை தயாரிக்க அவர்கள் நடவடிக்கை | ஹோமியோபதி நிறுவனம் அமைப்பதற்கு மருத்துவ சபையிடம் நிதி ஒதுக்கீடு இல்லை என்றும், இந்த ஆண்டுக்கான மூலதனச் செலவீனங்கள் சபைக்கு வழங்கப்படாததால், நாட்டின் பொருளாதார நிலை சீராகும் வரை, அந்த நிறுவனம் தொடங்குவது தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டு | ஹோதியோபதி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எடுக்காமையால் அந்த நிறுவனங்களை ஒழுங்குபடுத்தும் பணி நிறைவேற்றப்படவில்லை ல. | ள்ளதுடன் ஒழுங்குமுறைக்கான குறைந்தபட்ச தரங்களை நிர்ணயித்தல் மற்றும் ஒழுங்குமுறைகளின் தயாரிப்பு தற்போது நடைபெற்று வருகின்றது. | |
| (ii) | 28(6) உப பிரிவு | ஹோமியோபதி மருத்துவ துறையில் உள்ளவர்களை பதிவு செய்வதற்காக மருத்துவ சபையினால் நடாத்திச் செல்லப்படும் பதிவேடானது பதிவினை புதுப்பிக்கும் கட்டணங்கள் செலுத்திய மருத்துவர்கள் மற்றும் செலுத்தாத மருத்துவர்கள் ஆகியோரை தனித்தனியாக இனங்காண்பதற்கு மற்றும் நிலுவை கட்டணத்தை இனங்காணக் கூடிய வகையில் நாளது வரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்க வில்லை. | பதிவு மற்றும் புதுப்பித்தல் கட்டணத்திற்கான ஆவணங்களை தனித்தனியாக பராமரிக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டதாகவும், ஆவணங்கள் தற்போது தனித்தனியாக பராமரிக்கப்பட்டு வருவதாகவும், தவறுதலாக கணக்காய்வின்போது அப் பதிவேடு சமர்ப்பிக்கப்படுவதற்கு தவறியுள்ளதாகவும் குறிப்பிட்ப்பட்டிருந்தது.. | -மேற்படி- |
| (iii) | 30 ஆம் பிரிவு | ஹோமியோபதி மருத்துவ துறையில் பதிவு செய்வதற்காக பரீட்சையொன்று நடாத்தப்பட வேண்டிய போதிலும், பரீட்சையை நடாத்துவதற்காக சட்டங்கள் மற்றும் பிரமாணங்களை வழங்குதல் முடிக்கப்படாத காரணத்தினால் 2018 ஆம் ஆண்டில் விண்ணப்பங்கள் | ஹோமியோபதி மருத்துவப் பயிற்சியாளர்களை பதிவு செய்வதற்கான விதிமுறைகள் 2022 ஜூன் 10 அன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதாகவும், பரீட்சைக் குழுவின் உருவாக்கம் நிறைவடைந்துள்ள | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கோரப்பட்டிருந்தது. இதனால் பரீட்சையானது 2022 ஒக்டோபர் 31 வரையில் நடாத்தப்படாமையால் மருத்துவத் துறையில் பதிவு செய்தலானது தாமதமாகி இருந்தது. | தாகவும், வினாத்தாள்கள் தயாரிக்கும் பணி நடைபெற்று வருவதாகவும், சனவரி மாதம் இரண்டாம் வாரத்தில் பரீட்சை நடத்தப்படும் என்றும் குறிப்பிட்ப்பட்டிருந்தது.. | |
| (iv) | 31(1) உப பிரிவு | ஹோதியோபதி மருந்து கலப்பவர்களை பதிவு செய்வதற்கான ஒரு ஹோமியோபதி மருந்து கலப்பவர்களுக்கான பதிவேடொன்றைப் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் , 2022 ஒக்டோபர் 31 வரை அவ்வாறான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | ஹோமியோபதி விதிமுறைகள் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதுடன் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் கலப்பவர்களை பதிவு செய்ய முடியும். | -மேற்படி- |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை<br>------------------------------------ | | | |
| (i) | தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயம் 16.1 ஆம் பந்தி | சேவையில் நிரந்தரமாக்குதல், பதவியுயர்வு மற்றும் வினைத்திறமைகாண் தடைப் பதவி உயர்வுப் பரீட்சை போன்ற பரீட்சைகள் குறிப்பிட்ட தினத்தில் நடாத்தப்படுவதற்கு நிறுவனத் தலைவர் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் 2014 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை | வினைத்திறமை காண் தடைப் பரீட்சையை நடாத்துவதற்கு ஆயுர்வேதத் திணைக்களத்திற்கு வைத்திய சபையால் அதிகாரம் அளிக்கப்பட்டள்ளதாகவும், ஆயுர்வேதத் திணைக்களத்ினால் இது விரைவில் மேற்கொள்ளப்படுவ | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆட்சேர்க்கப்பட்டிருந்த 04 பதவிகளுக்கான அதிகாரிகள் 32 பேருக்காக கணக்காய்வுத் தினமாகிய 2022 ஒக்டோபர் 31 வரையில் வினைத் திறமை காண் தடைப் பரீட்சை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் இந்த உத்தியோகத்தர்களை சேவையில் நிரந்தரமாக்க முடியாமலிருந்ததுடன் அவர்களது தகுதி காண் காலத்தினையும் நீடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாகவும் மற்றும் ஒவ்வொரு அதிகாரிகளினதும் தகுதி காண் காலத்தினை நீடிப்பதற்கு வைத்திய சபை எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் | |
| (ii) | தாபன விதிக் கோவையின் XII ஆம் அத்தியாயம் 1.3 ஆம் பந்தி | வழக்கமாக விடுமுறைக்கான விண்ணப்பமொன்று விடுமுறை தொடங்கும் திகதிக்கு குறைந்தபட்சம் ஏழு நாட்களுக்கு முன்னதாகவே விடுமுறையை அங்கீகரிக்கும் அதிகாரி அலுவலகத்திற்கு பெறப்பட வேண்டியபோதிலும், மருத்துவ சபை அலுவலக அதிகாரிகளின் விடுமுறை விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்படவில்லை. | அனைத்து அலுவலர்களும் விடுமுறை பெறுவதற்கு குறைந்தபட்சம் 7 நாட்களுக்கு முன்னதாகவே விடுமுறையை அங்கீகரிக்கும் அதிகாரிக்கு விண்ணப்பத்தை சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் மற்றும் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு பதிவாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும். | -மேற்படி- |
| (iii) | தாபன விதிக் கோவையின் XII | 190 ஆம் பொது படிவத்தின் பிரகாரம் | காணப்பட்ட கோவிட் சூழ்நிலை | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆம் அத்தியாயம் 1.7 ஆம் பந்தி | விடுமுறைப்பதிவேடு நாளது வரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்க வில்லை. | காரணமாக, விடுமுறைப் பதிவேட்டை முறையாக நாளது வரையாக்க முடியாதெனவும் மற்றும் சரியாக நாளது வரையாக்கப்படுவதற்கான அறிவுறுத்தல் பதிவாளருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும். | |
| (iv) | தாபன விதிக் கோவையின் XII ஆம் அத்தியாயம் 3.1 ஆம் பந்தி | ஒரு அதிகாரி தனது பணியிடத்திலிருந்து அனுமதி பெறாமல் வெளியேற முடியாது என்றாலும், மருத்துவ சபை அதிகாரிகள் அனுமதியின்றி வெளியேறியிருந்ததுடன் வெளிச்செல்லல் பதிவேடு முறையாக பேணப்பட்டிருக்க வில்லை. | தற்போது குறிப்பிட்ட முறையில் வெளிச்செல்லல் பதிவேடு முறையாக பராமரிக்கப்படுகிறது. | -மேற்படி- |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br>------------------------------ | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 133 | சபைக்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று நிறுவப்படாமையுடன் உள்நாட்டு வைத்திய மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலை அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட வில்லை. | உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்வதற்கு அமைச்சுடன் இணைந்து நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும். . | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 751 | நிறுவனத்திற்குக் கிடைக்கின்ற சகல பொருட்களும் உடனடியாக பொருட்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் 2020 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 255,140 ஆன பொருட்கள் பொது மற்றும் அறுவைச் சிகிட்சைப் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | காணப்பட்ட கோவிட் சூழ்நிலையால், அலுவலகப் பணிகளை குறித்த நேரத்தில் செய்வதற்கு முடியாதிருந்ததாகவும் தற்போது பதிவேடுகளை முறையாக பராமரிப்பதற்கு பதிவாளருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (உ) | 2018 நவம்பர் 14 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் அரச வங்கிகளில் பேணப்படுகின்ற கணக்கில் பணத்தை வைப்புச் செய்ய வேண்டியிருந்த போதிலும் 2009 ஆம் ஆண்டில் அறவிடப்பட்ட ரூபா 1,204,500 ஆன கற்கை நெறிக் கட்டணங்கள் தனிப்பட்ட வங்கியில் சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31 இல் அக்கணக்கின் மிகுதி ரூபா 2,022,267 ஆக இருந்தது. | இப்பணம் தனிப்பட்ட கணக்கிலிருந்து அகற்றப்பட்டு அரச வங்கியில் நிலையான வைப்பாக வைப்புச் செய்வதற்கு மருத்துவச் சபை தீர்மானித்துள்ளது. | பொது வியாபாரச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தி | நிதியாண்டு முடிந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அங்கீகரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் வருடாநத அறிக்கையின் வரைவொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றாலும், | சபையில் கணக்காளர் ஒருவர் இல்லாததால், நாட்டில் நிலவும் கோவிட் சூழ்நிலை காரணமாக, வெளியார் கணக்காளரினால் கோவைகளை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது. | -மேற்படி- |

2021 நிதியாண்டுக்காக தயாரிக்கப்பட்ட கணக்குகள் 7 மாதங்களுக்கும் அதிக கால தாமதத்துடன் 2022 ஒக்டோபர் 4 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிரந்தது.
.

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 312,581 ஆன பற்றாக்குறையாக காணப்பட்டதுடன், அதனோடு ஒத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 1,179,379 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,406,798 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டதுடன், அரசின் மீண்டெழும் ஏற்பாடுகள் ரூபா 1,946,404 ஆல் அதிகரித்தமை இதற்கான பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பொதுமக்களிடம் பணம் சேகரிப்பதற்காக அதிகாரமளிக்கப்பட்ட எவ்வித ஏற்பாடொன்றும் இல்லாது மற்றும் முறையான அங்கீகாரமின்றி ‘‘ஹோமியோபதி நிதியம்’’ பெயரில் ஒன்று ரூபா 5,000 பெறுமதியான உதவிப் பத்திரப் புத்தகங்கள், அச்சிடப்பட்டிருந்தன. அச்சிடப்பட்ட ஆண்டு, அச்சிடப்பட்ட மொத்த உதவிப் பத்திரங்களின் எண்ணிக்கை, உதவிப் பத்திரங்களின் விற்பனை வருமானம் மற்றும் அப் பணம் வங்கியிலிடப்பட்டமை தொடர்பான தகவல்கள் எதுவும் சபையிடம் காணப்படவில்லை. மிகக் குறைந்த புத்தக எண் மற்றும் அதிகமான புத்தக எண் என்பவற்றுக்கிடையே 159 புத்தகங்கள் பற்றாக்குறையாகக் காணப்பட்டதுடன் அவற்றில் | இந்த உதவிப் பத்திரங்களை அழிப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் மற்றும் விரைவில் அவை அகற்றப்பட்டு நீக்கப்படும். | இந்த உதவிப் பத்திரப் புத்தக இருப்புக்கள் அகற்றப்பட்டு நீக்கப்படுதல் விரைவில் செய்யப்பட வேண்டும்.. |

| | | |
|---|---|---|
| சேகரிக்கப்பட முடியுமாகவிருந்த மொத்தப் பணம் ரூபா 795,000 ஆகும். அவற்றுள் 416 புத்தகங்களின் இருப்பொன்று மிகுதியாகக் காணப்பட்டதுடன் 2022 ஒக்டோபர் 31 வரை அந்த உதவிப் பத்திரப் புத்தகங்களை இரத்துச் செய்வதற்கோ அல்லது அகற்றப்பட்டு நீக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | |

## 3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 இன் 10 ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியொன்றை ஆரம்பிப்பதற்காக 2008 ஆம் ஆண்டின் போது கட்டிடமொன்றை நிர்மாணித்து, 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 1,199,254 செலவிடப்பட்டு அதற்காக தளபாடங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தது. அதன் கற்கைப் பணிகளை ஆரம்பிப்பதற்குரிய சட்டரீதியான சட்டகத்தினை தயாரிப்பதற்காக உரிய நடைமுறைகள் முன்னெடுக்கப்படாத காரணத்தினால் 2022 ஒக்டோபர் 31 ஆந் திகதி வரையிலும் கற்கைப் பணிகளை ஆரம்பிக்க முடியாதிருந்தது. அதன் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த நிலையான சொத்துக்கள் மற்றும் அதற்குரிய கட்டிடமொன்று 13 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டதுடன் கட்டிடம் அதன் நோக்கத்திற்கு மாறாக ஹோமியோபதி மருத்துவச் சபையின் அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்காகப் பயன்படுத்தப்பட்டது. | ஒரு மருத்துவக் கல்லூரியைத் தொடங்குவதற்கு போதனா மருத்துவமனையொன்று, ஒவ்வொரு துறைக்கும் துறைசார் தகுதி வாய்ந்த கலாநிதி பேராசிரியர் போன்ற பல வளங்கள் தேவைப்படுவதாகவும், இலங்கையில் தற்போது இந்த வளங்கள் எதுவும் இல்லாததால், 04 அறைகள் கொண்ட கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு, அழிவைத் தவிர்ப்பதற்காக அமைச்சின் செயலாளரின் வாய்மொழி அறிவுறுத்தலின் பேரில் தற்காலிகமாக மருத்துவ சபையின் அலுவலகமாக பயன்படுத்தப்படுகின்றதாகவும் | நிர்மாணிக்கப் பட்டுள்ள கட்டிடம் மற்றும் கொள்வனவு செய்யப்பட்டுள்ள உபகரணங்களை உரிய நோக்கங்களுக்கு ஈடுபடுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். |